இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் 10 ஆண்டுக் காலம், 15 ஆண்டுக் காலமாக கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு கவனித்து உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு, அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குரிசிலா பட்டு, பெருமாப்பட்டு, இருணாப்பட்டு, ஆண்டியப்பனூர் மிட்டூர், பூங்குளம் போன்ற ஊராட்சிகளை வாணியம்பாடி வட்டத்திலிருந்து திருப்பத்தூர் வட்டத்திற்கு மாற்றுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக மாவட்டம்; வட்டம் மற்றும் வருவாய் கிராமங்களின் ஆட்சி வரம்பில் 1991 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் வரை எவ்வித மாற்றமும் செய்யத் தடை ஆணை அமலில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பிரிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களிடம் கூட தனியாகச் சொல்லி ஒரு கடிதம் கொடுத்திருக்கிறேன். இது நீண்டகாலமாக இருக்கும் கோரிக்கை. அந்தப் பகுதிகளில் சில பணிகளுக்கு ஒட்டுமொத்தமாக திருப்பத்தூருக்கு வரவேண்டி இருக்கின்ற காரணத்தினால், தாலுக்காவுக்கு மட்டும் வாணியம்பாடி போக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கைகளை எண்ணி அமைச்சர் அவர்கள் உடனடியாக இந்த ஆண்டாவது பிரிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த அந்தக் கடிதம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது.

கூடலூர் தாலுக்காவைப் பிரித்தல்.

*8048—திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுகாவை பந்தலூர், கூடலூர் என்று இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9-15 மணி

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் கூடலூர் என்பது தமிழகத்தின் கடைசி எல்லை. அங்கு ஏராளமான வன விலங்குகள் இருக்கின்ற காரணத்தாலும் 1½ இலட்சம் வாக்காளர்கள் இருக்கக் கூடிய பகுதியாக கூடலூர் இருக்கின்ற காரணத்தாலும் அதை இரண்டாகப பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்டுக்கொள்கிறார். வினாவாகக் கேட்டால் தொடர்ச்சியாக வரும். " கேட்டுக் கொள்கிறேன் " என்று கேட்டுக் கொண்டால் அத்தோடு முடிந்து போகிறது.

திரு. எம். கே. கரீம் : அதை ஒட்டி ஒரே ஒரு வார்த்தை சொல்லிவிடுகிறேன். கடந்த 7 ஆம் தேதி 28 வயதான காசியம்மாளும் 9 மாத குழந்தையும் யானை அடித்து இறந்து போய்விட்டார்கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இரண்டாகப் பிரித்துவிட்டால் யானை அடிப்பது நின்று போய் விடுமா ?

திரு. எம். கே. கரீம் : இது அரசுக்குத் தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எந்த அமைச்ச ரிடம் கேட்கிறீர்கள். யானை அடிப்பதற்குப் பொறுப்பு யார் ? (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : கால்நடை அமைச்சரிடம் கேட்டால் நன்றாக இருக்கும். (சிரிப்பு).

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நான் கூடலூர் காரனாக இல்லாவிட்டாலும் நீலகிரியைப் பற்றியும், தமிழ் நாட்டைப்பற்றியும் பூராவும் தெரியும். எந்த இடத்தில் வேண்டுமானாலும் கேள்வி கேட்கலாம். நீலகிரிப் பகுதியில் பெரியதொரு நிலப்பரப்பில் 100, 150 கிலோ மீட்டர் தூரம்

TRUTH ALONE TRIUMPHS

இருக்கும் என்று நினைக்கிறேன், அதனுடைய நீளம். அப்படிப் பட்ட பெரும் மலைப்பகுதி, நிர்வாகத்திற்கே வசதி இல்லாமல் அரசு ஊழியர்கள் மிகப் பெரிய இடையூறுகளுக்கு மத்தியிலே போய் செயல்பட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, நிர்வாக சௌகரியத்தை ஒட்டியும் மக்களுக்கு உடனுக்குடனே தங்களுடைய பிரச்சினைகளை நேரிடையாகக் கொண்டுபோய் அதிகாரிகளிடம் சொல்வதற்கும் வேண்டி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து, இதறகு என்ன தடை இருக்கிறது என்று சொல்லப் போகிறாரோ தெரியவில்லை, அது எல்லாம் சொல்லாமல் அந்த தாலுக்காவை இரண்டாகப் பிரிப்ப தற்கு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதிர்ச்சியும் பயிற்சியும், பக்குவமும் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் ஏதாவது தடை இருக்கும் என்று அமைச்சர் சொல்லிவிடாமல் என்று பீடிகை போட்டு தனது கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். விளக்கத் திற்காகச் சொல்லுகிறேன். நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகை மண்டலம் வட்டத்தை பிரித்து குந்தா என்ற புதிய வட்டம் அமைக்கவும் கூடலூர் வட்டத்தைப் பிரித்து புதிய பந்தலூர் என்ற வட்டத்தை அமைக்கவும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசால் பரிசீலிக்கப்பட்டது. மக்கள் தொகை, பட்டாதாரர்களின் எண்ணிக்கை, நிலவரி, குறு வட்டங்கள் மற்றும் கிராமங்களின் எண்ணிக்கை இவற்றைப் பார்க்கும்போது கூடலூர் ஒரு சிறிய வட்டமாக மிஞ்சும். எனவே இதனை இரண்டாகப் பிரிக்கத் தேவை இல்லை என்று கருதப்பட்டது. மற்றும் கூடலூர் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பை சில ஆண்டு களுக்குத் தள்ளி போடலாம் என்றும் கருதப்பட்டுள்ளது, இம் மாநிலத்தில் உள்ள 7 பெரிய மாவட்டங்களை பிரித்து அமைக்க கருதப்பட்டு ஒவ்வொரு மாவட்டங்களாக பிரித்து அமைக்கப் பட்டு வரப்படுகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். தென்னாற்காடு மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங் களை பிரித்து அமைக்கும் வல்லுநர் குழுவின் அறிக்கை அரசுக்கு கிடைக்கப்பெற்று ஆய்வில் உள்ளது. எனவே பெரிய மாவட்டங்கள் பிரித்து அமைக்கப்பட்டவுடன், உடன் பிரித்து அமைக்கப்பட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லாத மற்றும் பிரிப்பதை சிறிது காலத்திற்கு தள்ளி போடலாம் என்று கருதப்படுகிற வட்டங் களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. இறுதியாக வழக்கமாக நான் சொல்வதை திருப்பியும் சொல் கிறேன். 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் காரணமாக வட்டங்களின் ஆட்சி வரம்பில் 30—6—1991 வரை எவ்வித மாற்றமும் செய்ய தடை ஆணை அமலில் உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.